விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 250 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 10 செவ்வாய்க்கிழமை (26.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal
றோயல்
சுத்தமான பசு நெய்
ஆய்வுகூடத்தில் தரம்
பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
Marketed By:-
(C-3734)
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமை)
தொ.பே : 021 2222 567

## செம்மணி மனிதப் புதைகுழியின்
## அகழ்வுத் தளங்களை மேலும் விரிவாக்கம் செய்யும் பணிகள் நேற்று முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுத் தளங்களை மேலும் விரிவாக்கம் செய்யும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வுப் பணிகள் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமாகின.

15ஆம் பக்கம் பார்க்க

## வித்யா படுகொலை வழக்கு
## மேன்முறையீட்டை விசாரிக்க நீதிமன்றம் தீர்மானம்

(கொழும்பு)

2015ஆம் ஆண்டு புங்குடுதீவில் மாணவி சிவலோகநாதன் வித்யா கடத்தப்பட்டு, கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ள வழக்கில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழிக்கு
# சர்வதேச விசாரணையைக் கோரி
# தமிழர் தாயகத்தில் போராட்டம்
## தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாக அழைப்பு



செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச விசாரணையைக் கோரி வடக்கு கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 29ஆம் திகதி கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி வெளியீடு

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி நேற்றையதினம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்

15ஆம் பக்கம் பார்க்க

## ராஜபக்ஷர்களுக்கு எதிராகவும் விசாரணை
### அமைச்சர் பிமல்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மட்டுமல்லாமல், அனைத்து ராஜபக்ஷர்களுக்கு எதிராகவும் விசாரணைகள் நடைபெற்று

15ஆம் பக்கம் பார்க்க

## சந்நிதியில் 108 ஜோடிகளுக்கு 28ஆம் திகதி இலவசத் திருமணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் திருமண வயதை எட்டியும் பொருளாதார நிலைமை காரணமாக திருமணம் செய்ய முடியாத நிலையில் உள்ள 108 ஜோடிகளுக்கு திருமணம் செய்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வர்த்தக சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கப்பூரை வதிவிடமாக

15ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஜனாதிபதி தலைமையில் ஆரம்பப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் முதலாம் திகதி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அவை வடக்கில் யாழ்ப்பாணத்தில் இருந்தே ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதற்காக எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வருகை

15ஆம் பக்கம் பார்க்க

## ரணிலுக்கு எதிரான வழக்கு இன்று
## கொழும்பில் போராட்டத்துக்கு மக்களை திரட்டும் எதிர்க்கட்சியினர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு விசாரணை இன்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் இடம்பெறவுள்ளது.

இதேநேரம் கொழும்பில் பொதுமக்களைத் திரட்டி போராட்டத்தில் ஈடுபட எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

நேற்று (25) நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய SJB இன் 'ஹோரா' அமைப்பாளர் சரித் அபேசிங்க, கூட்டு எதிர்க்கட்சி கோட்டை நீதவான் நீதிமன்றத்தை

04ஆம் பக்கம் பார்க்க

## 400 ஆண்டுகள் பழைமை வாய்ந்த
## வட்டுக்கோட்டை துணைவி சிவன் ஆலய கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

400 ஆண்டுகள் பழைமை வாய்ந்த வட்டுக்கோட்டை துணைவி சிவன் ஆலய மகா கும்பாபிஷேகம் மிக விரைவில் நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாணம் மரபுரிமை அமையம் தெரிவித்துள்ளது.

மிகத் தொன்மையான வழிபாட்டுத்தலமான வட்டுக்கோட்டை துணைவி சிவன் ஆலயம் பல ஆண்டு காலம்


15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10 - 09 - 1942 | 24 - 08 - 2025 |



## திருமதி கந்தையா தெய்வநாயகி

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தன் வாழ்வின் முற்பகுதியை தொண்டைமானாறு செல்வச்சந்நிதியையும் பிற்பாதியை உடுப்பிட்டியையும் தனது வாழ்விடமாகக் கொண்ட திருமதி கந்தையா தெய்வநாயகி அவர்கள் (24.08.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று சந்நிதி முருகன் திருவடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி பொன்னுத்துரை - மாணிக்கம் தம்பதியினரின் இரண்டாவது புதல்வியும் காலஞ்சென்றவர்களான மகேந்திரராசா, ரவீந்திரராசா மற்றும் மகேந்திரராணி, வசந்தராதேவி, முருகமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் தங்கேஸ்வரி, ஸ்ரீஷ்காந்தராஜா, புஷ்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரணவானந்தன்,செந்தமிழ் செல்வி, விஜயவீரன், பத்மரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வகுமார், செல்வகுமாரி, செல்வரதி, நிதர்ஷினி, அபிமன்யு, அபர்ணா, காண்டீபன், தேனுரேகா, தாட்சாயினி, சுபாஜினி, திருக்குமரன், நளாயினி, பிரவின், சரண், பிரசானி ஆகியோரின் பாசமிகு பாட்டியும் பிரசாந், தரணியா, சுகன்யா, எழிலன், அகரன், நிகிழன், இளநிலா, றிஷானி, அக்ஷயா, அஸ்வின், அனுஷன், ஹாரினி, ஹான்சிகா, அஸ்வின், அஜய் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2025) செவ்வாய்க்கிழமை மாலை 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தொண்டைமானாறு காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வீரபத்திர கோவிலடி,
உடுப்பிட்டி.

தகவல் : குடும்பத்தினர்
076 441 8386, 077 766 6276

(C - 3732)

# காணவில்லை



மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பரமானந்தம் யோகேஸ்வரன் (வயது 75) என்பவரைக் கடந்த மூன்று தினங்களாகக் காணவில்லை.

மனநிலை பாதிக்கப்பட்ட இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து

**077 609 6399**

என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தின்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக
கடமையாற்றும் செல்வி **கந்தப்பிள்ளை பத்மினி**
அவர்களின் பாசமிகு தாயார்

## அமரர் கந்தப்பிள்ளை பூரணம்




தோற்றம் :- 12.09.1930 மறைவு :- 24.08.2025

அவர்கள் 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-3773)

பிரிவுத் துயருடன்:-
பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

# மரண அறிவித்தல்



## திரு. குமாரசாமி ருத்ரகுமார்

**Innomedia Lanka (Pvt) Ltd - Chairman / Managing Director (Company Secretaries & Consultants), K.R. Accounting Services (Director Accountants & Tax Consultants), K.R.R. associates ( Manager Charterd Accountants)**

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் தெஹிவலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.குமாரசாமி ருத்ரகுமார் கடந்த (22.08.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளைப்பாறிய அதிபர் திரு. க.இ.குமாரசாமி (J.P) - திருமதி சரஸ்வதி குமாரசாமி (ஆசிரியை - நாவலர் பாடசாலை) தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற திரு.S.V. செபரட்ணம் (பிரதம லிகிதர்) - திருமதி. சிவகாமி செபரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி. ஜோஜினா சுகந்தி ருத்ரகுமார் (இளைப்பாறிய ஆசிரியை -கொ/விவேகானந்தா கல்லூரி, கொழும்பு - 13, கொ/ இசிபதன கல்லூரி, கொழும்பு-05) அவர்களின் அன்புக் கணவரும் பிரகதீஸ் (K.R. Accounting Services) அவர்களின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவகுமார் (Chemist. Bour & Company), திருமதி. அரவிந்தகுமாரி (M.A) மற்றும் இந்திரகுமாரி (M.Sc), கிரிஜாகுமாரி (Accountant - U.K), Dr. திருமதி வசந்தகுமாரி (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர் களான இ.சிவானந்தன் (முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர்), சட்டத்தரணி லோகேஸ்வரன் மற்றும் ஜெயரட்ணம் (Jano Industrial Chemist), மகேசன் (Solicitor - U.K) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 27.08.2025 புதன்கிழமை காலை 08:30 மணிமுதல் மஹிந்த மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு, பிற்பகல் 02:30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 724 0139, 075 093 0422
079 563 39028, 079 399 72197

தகவல் :
குடும்பத்தினர்

(C-3736)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால்
# 20 வருட சிறைத்தண்டனை கிடைக்கும் சாத்தியம்!
## ஜனாதிபதி சட்டத்தரணி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் 20 வருடங்கள் சிறைத்தண்டனைக்கு உட்படுத்தக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.**

பொதுச் சொத்துக்களை மோசடி செய்ததாக ஒருவர் மீது குற்றம்சாட்டப்பட்டு, அந்த குற்றம் நிரூபிக்கப்பட்டால் சட்டத்திட்டங்களின் பிரகாரமும் குற்றத்தின் தன்மையை பொறுத்து 20 வருடங்கள் சிறைத்தண்டனைக்கு உட் படுத்தக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக ஜனாதிபதி சட்டத்தரணி யு.ஆர்.த சில்வா தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கியிருந்த தொலைபேசி உரையாடலில் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

"நீதிமன்றத்தில் நடை பெறும் வழக்கின் தன்மையைப் பொறுத்து தீர்ப்பு தீர்மானிக் கப்படும். ஆனால் அரசாங்கப் பணம் மோசடி செய்யப்பட வில்லை என்பதோடு அரச பணம் வீணாக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டால், அப் பணத்தை மீள அறவிடக்க கூடிய குற்றவியல் சட்டம் 386-388 குறிப்பிடப்பட்டுள்ளப்படி இரு தரப்பும் சமாதானத்திற்கு வரக் கூடிய நிலை காணப் படுகிறது.

பொதுச் சொத்துக்கள் மோசடி சட்டம்" என்று குறிப்பிட்ட சட்டம் இலங்கையில் நேரடியாக இல்லை.

எனினும், பொதுச் சொத்துக் களைப் பாதுகாப்பதற்கும், மோசடிகளைத் தடுப்பதற்கும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் களை வெளிப்படுத்துவதற்கும் பல சட்டங்களும், அரசினால் உருவாக்கப்பட்ட நிறுவனங் களும் உள்ளன.

அவற்றில் பொதுச் சொத்துக் கள் மோசடி செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையி லேயே முன்னாள் ஜனாதிபதி க்கு எதிராக விசாரணைகள் நடைபெற்று கைது செய்யப்பட் டுள்ளார்.

இது இலங்கையின் சாதா ரண சட்டத்தின் படியல்ல.இது "பொதுச் சொத்துக்கள் மோசடி சட்டம்" விசேட சட்டத்தின் கீழ் நடைபெறுவதாகும்.இதில் நீதவானுக்கு விசேட காரணங் களைக் கருத்தில் கொண்டு பிணைவழங்க முடியும்" என வும் தெரவித்தார். (நி).

## ரணிலின் கைது அரசியல் பழிவாங்கல் அல்ல பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் விளக்கம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது அரசியல் பழிவாங்கல் அல்ல என்றும், அது நீதி மன்றத்தின் சுயாதீன செயற் பாடு என்றும் அரச தரப்பு தெரிவித்துள்ளது.

தற்போது பேசுபொருளாக மாறியுள்ள ரணில் விக்ரம சிங்கவின் கைது குறித்து பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜே பாலவிடம் ஊடகம் ஒன்று வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "யாரையும் கைது செய்வதா? அல்லது அவரை விளக்கமறியலில் வைப்பதா? என்பது குறித்து நானோ அல்லது அரசாங்கமோ தீர்மானிப்பது இல்லை.

அத்துடன், எதிர்தரப்பினர் அனைவரும் ஓர் அணியில் இணைவார்கள் என்பதை அறிந் திருக் கின் றோம், குறித்த கூட்டணியால் அர சாங்கத்திற்கு எவ்வித சவா லையும் ஏற்படுத்த முடியாது.

யாரேனும் ஒருவருக்கு எதிராக விசாரணைகள் இடம்பெறுமாயின் அது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை குற்றப் புலனாய்வு திணைக்களம் எடுக்கும். அத்துடன், இங்கு யாருடைய ஜனநாயக உரி மையும் பறிக்கப்படவில்லை, ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நீதிமன்றத்தில் இடம் பெற்ற விசாரணைகளுக்கு அமைய விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கொள்ளையடித்து, ஊழல் செய்வோருக்கு எதிராக விசார ணைகள் முன்னெடுப்பதை, ஜனநாயக உரிமை மீறப் படுவதாக கூறமுடி யுமா?

அத்துடன், இந்தக் கைது ஜனாதிபதியோ அல்லது அமைச்சரோ முன்னெடுத்த நடவடிக்கை அல்ல, இது தொடர்பாக மேலதிக விசா ரணைகள் நடத் தப்பட்டு, அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனைப் புரிந்துகொள்ள முடியாது எனின், எதனை யும் செய்ய முடியாது, அர சியல் பழிவாங்கலை முன் னெடுத்திருந்தால் அதனை நீதிமன்றத்திடம் எடுத் துரைக்க முடியும் என அமைச்சர் ஆனந்த விஜே பால தெரிவித்துள்ளார். (நி)

## தேசிய வைத்தியசாலையில் மீண்டும் ரணிலை சந்தித்த சஜித்

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று காலை மீண்டும் ஒருமுறை சந்தித் துள்ளார்.

இதன்பின்னர் கருத்து வெளியிட்ட சஜித் பிரேமதாச, "நாட்டின் நீதித்துறை செயல் முறையை தாங்கள் மதிக் கின்றோம், ஆனால் இந்த விவகாரம் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு முன்பே சில பிரிவுகள் நீதிமன்ற தீர்ப்புகள் குறித்து அறிவிப்பு களை வெளியிட்டிருப்பது கவ லைக்குரியது என்றும் குறிப் பிட்டார்.

அத்துடன் நாட்டின் சுயாதீன நீதித்துறையில் தனக்கு முழு நம்பிக்கை இருப்பதாக வும், ரணில் விக்கிரமசிங்க இன்று நீதிமன்றத்தில் முன் னிலைப் படுத்தப்படும்போது, நீதியான மற்றும் சுயாதீன மான தீர்ப்பு வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (நி)

## பிரதி பொலிஸ்மா அதிபர் கைது

(கொழும்பு)

கொழும்புப் பிரிவுக்கு பொறுப் பான பிரதி பொலிஸ்மா அதிபர் உதித்த லியனகே நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். குற்றப்புலனாய்வுத் திணைக் களத்தினால் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

அனுராதபுரம் - ஸ்ரா வஸ்திபுர, திபிரிகடவல பகுதி யில் உள்ள விகாரைக்கு அரு கில், அவரது மனைவி புதை யல் தோண்டிய விவகாரம் தொடர்பில் கொழும்பு பிரதி பொலிஸ் மா அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக, குறித்த கொழும்பு பிரதி பொலிஸ் மா அதிபரின் மனைவி மற்றும் 8 பேர் கைது செய்யப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



# ரணிலை உடனடியாக விடுதலை செய்யுங்கள்!
## வெளிநாட்டிலிருந்து ஒலித்த குரல்



(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை உடனடியாக விடு தலை செய்ய வேண்டும் என்று நோர்வேயின் முன் னாள் அமைச்சர் எரிக் சொல் ஹெய்ம் அழைப்பு விடுத் துள்ளார்.

இது குறித்து அவரது உத்தி யோகபூர்வ X தளத்தில் பதிவிட்டு அவர் இதனைத் தெரி வித்துள்ளார். அந்தப் பதிவில் மேலும் உள்ளதாவது,

விளக்கமறியலின் போது அவரது உடல்நிலை குறித்து நாம் அனைவரும் கவலைப் படுகிறோம். 2022 ஆம் ஆண்டில் நாடு பொருளாதார மற்றும் அரசியல் குழப்பம் அடைந்தபோது இலங்கை யைக் காப்பாற்ற எழுந்து நின்ற தலைவர் ரணில் விக்கிரம சிங்க, ரணிலுக்கு எதிரான குற் றச்சாட்டுகள் தகுதியற்றவை.

அவை உண்மையாக இருந்தாலும், ஐரோப்பாவில் அவை எந்தவொரு குற்றமா கவோ அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையையும் கொண்டிருக்காது.

ஊழலுக்கு எதிரான இல ங்கை அரசாங்கத்தின் பிரச் சாரத்திற்கு நான் முழு ஆதரவை வழங்குகிறேன், ஆனால் தயவுசெய்து உண் மையான பிரச்சினைகளில் கவனம் செலுத்துங்கள் என்று அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இலவச புகையிரத ஆணைச்சீட்டு நிறுத்தம் மீள வழங்குமாறு தர்மகுமாரன் கோரிக்கை



தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குகொள்ளும் மாணவர்களுக்கான இலவச புகையிரத ஆணைச்சீட்டு வழங்க வேண்டும் என உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்ம குமாரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட போட்டிகள் ஆரம்பமாகின்றன.

இந்த தேசியமட்ட விளையாட்டுப் போட்டிக்கு செல்லும் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வந்த இலவச புகையிரத ஆணைச்சீட்டு நிறுத்தப்பட்டுள்ளது. நிறுத்தப்பட்டமைக்கான காரணம் எம்மால் அறிய முடியாமல் போனாலும் அதனை வழங்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டிய தார்மீக கடமையுள்ளது.

இதன் காரணமாக பெரும்பாலும் பாதிக்கப்படுவது கிராமப்புற பாடசாலையில் கல்விகற்கும் வறிய மாணவர்களே. வசதியுள்ள பாடசாலைகள் மாற்று வழியை நாடி போட்டிக்கு செல்வார்கள். வசதியற்ற பாடசாலைகள் போட்டிக்கு செல்லாது விலகிக்கொள்வார்கள்.

இதனால் வடக்கின் விளையாட்டு சரிவை நோக்கி செல்வது மட்டுமல்லாமல் வசதியுள்ள பாடசாலையை நோக்கி மாணவர்கள் செல்வதற்கு தூண்டுவதுடன், கிராமப்புறப் பாடசாலைகள் வளர்ச்சி அடையாது மூடும் நிலை உருவாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் ஆளுநர் கிராமப்புற பாடசாலை மாணவர்கள் தேசியமட்ட போட்டிக்கு செல்வதற்கு புகையிரத ஆணைச்சீட்டை பெற்றுக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (3)



மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியின் மாணவி டானியலா 18 வயதிற்குட்பட்டவர்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் 9.23 மீற்றர் தூரம் எறிந்து முதலாம் இடத்தைப்பெற்று தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

## மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டியில் மன்னார் கல்வி வலயம் முதலிடம்!



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டியில் ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையில் மன்னார் கல்வி வலயம் தொடர்ச்சியாக மூன்று தடவைகள் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்து சாதனை படைத்துள்ளனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் தொடர்ந்து 5 நாட்கள் நடைபெற்றது.

இதில் ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையில் மன்னார் கல்வி வலயம் 870 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், வலிகாமம் கல்வி வலயம் 532.5 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்தையும், யாழ் கல்வி வலயம் 527 புள்ளிகளை பெற்று மூன்றாம் இடத்தையும், முல்லைத்தீவு கல்வி வலயம் 338.5 புள்ளிகளை பெற்று நான்காம் இடத்தையும், மடு கல்வி வலயம் 192.5 புள்ளிகளை பெற்று ஐந்தாம் இடத்தையும், வவுனியா தெற்கு கல்வி வலயம் 182 புள்ளிகளை பெற்று ஆறாம் இடத்தையும், தென்மராட்சி கல்வி வலயம் 154 புள்ளிகளை பெற்று ஏழாம் இடத்தையும், வடமராட்சி கல்வி வலயம் 142.5 புள்ளிகளை பெற்று எட்டாம் இடத்தையும், துணுக்காய் கல்வி வலயம் 132 புள்ளிகளை பெற்று ஒன்பதாம் இடத்தையும், கிளிநொச்சி தெற்கு கல்வி வலயம் 113 புள்ளிகளை பெற்று பத்தாம் இடத்தையும், வவுனியா வடக்கு கல்வி வலயம் 98 புள்ளிகளை பெற்று பதினோராம் இடத்தையும், தீவக கல்வி வலயம் 78 புள்ளிகளை பெற்று பன்னிரெண்டாம் இடத்தையும் மற்றும் கிளிநொச்சி வடக்கு கல்வி வலயம் 69 புள்ளிகளை பெற்று பதின்மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (3-90)

## சர்வதேச...

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் பங்காளி கட்சிகளான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ்பிரேமச்சந்திரன், தமிழீழ விடுதலைக்கழகத்தின் தலைவர் த. சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் முருகேசு சந்திரகுமார், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோருடன் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ சுமந்திரன் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் பல்வேறு இடங்களில் மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலான புதைகுழிகள் வடக்கு கிழக்கில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுக்கு என்ன நடந்தது என யாருக்கும் தெரியாது.

தற்போது செம்மணி மனிதப் புதைகுழிகளில் அகழ்வுகள் நடைபெற்று வருகின்றது. அதில் 140க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் 90 வீதமானவை ஆடைகள் அற்ற நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் குழந்தைகளின் எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

அவற்றுக்கு சர்வதேச விசாரணைகள் கோரியும் சர்வதேச நிபுணர்களின் கண்காணிப்பில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசிய பரப்பில் பயணிக்கும் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது எனத் தெரிவித்தனர்.

செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச விசாரணை கோரி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 29ஆம் திகதி கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-7,33)

## கொழும்பில்...


நோக்கி பேரணி செல்வதற்கு முன்பு கொம்பனித் தெருவில் இருந்து ஒன்று கூட திட்டமிட்டுள்ளதாகக் கூறினார்.

“இது ஒரு தனிநபரைப் பற்றியது மட்டுமல்ல. இது அரசியல் அடக்குமுறைக்கு எதிராக நிற்பது பற்றியது” என்று அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இளைஞர் முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் ஹேமந்த ஸ்ரீலாலும் இதேபோன்ற உணர்வுகளை எதிரொலித்தார். முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்கவை மட்டுமல்ல, ஜனநாயகக் கொள்கைகளைப் பாதுகாப்பதே இந்தப் போராட்டத்தின் நோக்கமாகும் என்று வலியுறுத்தினார்.

“ரணில் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் பிற முன்னாள் ஜனாதிபதிகள் அடுத்ததாக இருக்கலாம். உள்நாட்டுப் போரின் மூலம் நாட்டை வழிநடத்திய ஒரு முன்னாள் தலைவர் அரசியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுவதை நாங்கள் அனுமதிக்க முடியாது. இது தொடர்ந்தால், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கூட பெலவத்தையில் உள்ள அவரது கட்சித் தலைமையகத்தை அணுகுவதைத் தடுக்கலாம்,” என்று அவர் எச்சரித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தின் வைரவர் சாந்தி உற்சவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்று, வைரவர் உற்சவத்துடன் மஹோற்சவம் இனிதே நிறைவேறியது. (படங்கள்: சிவசாந்தன்)

# மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு பெருவிழா

(மன்னார்)

வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையில் மன்னார் மாவட்ட செயலகமும், மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்தும் மன்னார் மாவட்ட கலைப் பண்பாட்டுப் பெருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.


மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையின் தலைவர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் திருமுன்னிலையினை மன்னார், மாதோட்ட விகாரையின் விகாராபதி வண.அம்பகஸ்வெவ சங்கரத்த தேரர், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் மன்னார் இந்து மத பீட தலைவர் சிவஸ்ரீ மஹா தர்ம குமாரக் குருக்கள் மற்றும் மன்னார் ஜம்மிய்யதுல் உலமா சபைத் தலைவர் மௌலவி அஷ் ஷெஸ்க் MACMM அஸ்லம் ஆகியோர் வகிக்கவுள்ளனர்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதிப்பணிப்பாளர் திருவாட்டி லாகினி நிருபராஜ் மற்றும் மன்னார் மூத்த சட்டத்தரணி ஜனாப் மு.மு.சபுறுதீன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் க.செல்வன் மற்றும் மடுவலயக்கல்விப் பணிப்பாளர் திருவாட்டி அ.கி.வொலன்ரைன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் அதிதி கலை விருந்தினர்களா மன்கலைச்சுரபி ஜனாப் ஜாமல்தீன் முகம்மது முத்தலிபாவா (முசலி), செழுங்கலை வித்தகர் கஸ்பார் ஜேம்ஸ் (நானாட்டான்), மன்கலைச்சுரபி திருமதி.பராசக்தி விசுவாசம் (மாந்தை மேற்கு), மன்கலைச்சுரபி ஜெகநாதி சிவசம்பு (மடு) மற்றும் கலாபூசணம் செபமாலை அந்தோனிப்பிள்ளை (மன்னார் நகரம்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் மன் இளம் கலைச்சுடர், மன்கலைத் தென்றல் மற்றும் மன் கலைச்சுரபி ஆகியவற்றைச் சேர்ந்த கலைஞர்களின் கௌரவிப்பு இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3)

# பண்டாரவன்னியனின் 222 ஆம் ஆண்டு வெற்றி நாள் நினைவேந்தல்



(வவுனியா)

வன்னிப் பெருநிலப்பரப்பின் மாவீரன் பண்டாரவன்னியன் முல்லைத்தீவில் அமைந்திருந்த ஒல்லாந்தக்கோட்டை மீது தாக்குதல் மேற்கொண்டு வெற்றியீட்டிய 222 ஆம் ஆண்டு வெற்றிநாள் நிகழ்வு நேற்று கரைதுறைப்பற்று பிரதேச சபை யின் ஏற்பாட்டில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள மாவீரன் பண்டாரவன்னியனின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலர் தூவி உணர்வெழுச்சியுடன் அஞ்சலி நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபைத் தவிசாளர்,செயலாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தார்கள். (8-299)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3335

### சஞ்சீவன்


இருப்பதிலேயே கொடுமையான விடயம் 30 நாள் கஷ்டப்பட்டு வேலை செய்து வாங்குற சம்பளம்



3 நாள் கூட கையில் இருக்குதில்லை

### நேகா

வியர்வை வரும் வரை விளையாடியது அந்தக் காலம்



பேட்டரி லோ ஆகும் வரை விளையாடுவது இந்தக் காலம்

### கிஷோன்

படிக்கும் போது சொந்தமாக ஹோர்ம் வேர்க் செய்யனும்



வேலைக்கு போகும் போது சொந்த ஹோர்ம்காக வேர்க் செய்யனும்

### சஸ்விகன்

கடவுள் படைச்சதிலேயே இரண்டு உருப்படியான விடயம்



ஒன்று சனிக்கிழமை இன்னொன்று ஞாயிற்றுக்கிழமை

### திவ்யா

தத்துவம்: நீ யோசிக்காமல் எடுத்த முடிவுகள் அனைத்தும் உன்னை வாழ்நாள் முழுவதும் யோசிக்க வைத்து விடும்




உண்மை தான் தம்பி. யோசிக்காமல் கல்யாணம் செய்திட்டு இப்ப ஏன்டா பண்ணினேன் என்று நினைச்சு அழுகுறேன்

### கிருஸ்னா

புரிந்து கொண்டு புரியாத மாதிரி நடித்தால் அது மனைவி



புரியாமல் புரிந்து விட்டது போல் நடித்தால் அது கணவன்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படங்கள் :- சிவசாந்தன்)

# எமது நிலம் எமக்கு வேண்டும்!

## பருத்தித்துறையில் நேற்று கவனயீர்ப்பு

**(யாழ்ப்பாணம்)**

**பருத்தித்துறை நகரசபை ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் காணப்படும் படை முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தி பருத்தித்துறையில் நேற்று திங்கட்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது**

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் மற்றும் வெளிச்ச வீட்டை ஆக்கிரமித்து அமைந்துள்ள கடற்படை முகாம் என்பன போருக்கு பின்னரான நகரின் வளர்ச்சிக்கு பாரிய தடைக் கல்லாக உள்ளது.


பருத்தித்துறை நகரின் வளர்ச்சி கருதியும் பருத்தித்துறை வாழ் மக்களின் நன்மை கருதியும் மேற்படி இராணுவ, கடற்படை முகாம்களை அகற்றித்தருமாறு வலியுறுத்தியே குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் காலை 8.30 மணியளவில் ஆரம்பித்த போராட்டம் பருத்தித்துறை நகர் வழியாக பிரதான வீதி ஊடாகப் பயணித்து பருத்தித்துறை பிரதேச செயலகத்தை சென்றடைந்தது. காணி விடுவிப்பு, இராணுவ வெளியேற்றம் என்பன உள்ளிட்ட கோசங்களை எழுப்பி போராட்டம் முன்னெடுக்கப் பட்டதுடன் மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனாதிபதிக்கான மகஜர் பருத்தித்துறை பிரதேச செயலக பதில் பிரதேச செயலாளர் பசுபதி தயானந்தனிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் எமது நிலம் எமக்கு வேண்டும் இராணுவமே வெளியேறு, வெளிச்ச வீடு எங்கள் சொத்து இராணுவமே வெளியேறு, நீதிமன்றம் எங்கள் சொத்து இராணுவமே வெளியேறு, தபால் நிலையம் எங்கள் சொத்து இராணுவமே வெளியேறு, பருத்தி நகரை பாதுகாப்போம், நீதிமன்றத்தை இடமாற்றாதே, வடமராட்சியின் தலைநகர் பருத்தித்துறை உள்ளிட்ட பதாகைகளை தாங்கியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இப் போராட்டத்தில் வர்த்தகர்கள், பொது மக்கள், அரசியல்வாதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (8-60)






சிதம்பரா கணிதப் பரீட்சைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும், கணித விழா - 2025 நிகழ்வு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

# விநாயகர் சதுர்த்தி விஷேட தீர்த்தவாரி

(யாழ்ப்பாணம்)

இருபாலை, கோப்பாய் தென்கோவை திருவருள் மிகு கற்பகப்பிள்ளையார் ஆலய விநாயகர் சதுர்த்தி விஷேட தீர்த்தவாரி உற்சவம் நாளை புதன்கிழமை ஆவணிச் சதுர்த்தி நன்நாளில் இடம் பெறவுள்ளது.

ஆலயத்தில் அமைந்துள்ள சதுர்த்திப் பிள்ளையாருக்கு காலை 6 மணி முதல் மாலை 3 மணிவரை பக்தர்கள் கற்பகப் பிள்ளையார் தீர்த்த புஷ்கரணியிலிருந்து தீர்த்தம் எடுத்து வந்து தீர்த்தவாரி செய்ய முடியும்.

அத்துடன் அன்று மாலை 4 மணிமுதல் கற்பகப் பிள்ளையாருக்கு விஷேட அபிஷேகமும், விஷேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்று மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து சுவாமியின் திருவீதியுலாவும் இடம்பெறவுள்ளதென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (3)

# உப்புக்கேணி குளத்திற்கு பாதுகாப்பு சுவர் அமையுங்கள்!

## கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட உப்புக் கேணிக்குளத்திற்கு பாதுகாப்புச்சுவர் அல்லது இரும்பிலான வேலி அமைக்கப்பட வேண்டும் என கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கமானது நகரசபையிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

கோவிற்குடியிருப்பு-உப்புக் கேணிச் சூழல் அடிக்கடி வெள்ள அனர்த்தம் ஏற்படும் பகுதியாக காணப்படுவதனால் நகரசபை குளத்தினை ஆழப்படுத்தி நீரின் கொள்ளளவை அதிகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தது.

இருப்பினும் நீண்ட காலமாக உப்புக்கேணிக் குளமும் அதனோடு இணைந்த வீதியும் புனரமைப்புச் செய்யப்படாமையால் வீதியின் பெரும் பகுதியை குளம் ஆக்கிரமித்து விட்ட நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் மாரி காலத்திலும்-இரவு வேளைகளிலும் உப்புக்கேணி வீதி ஊடாக பயணிப்போர் தவறுதலாக குளத்திற்குள் விழக்கூடிய அபாய நிலை இருப்பதனால் மாரி காலத்திற்கு முன்பாக குளத்தின் இரு கரைப் பகுதிகளுக்கும் பாதுகாப்புச் சுவர் அல்லது வேலி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்-குள அபிவிருத்தி மற்றும் வாய்க்கால் அமைப்பிற்கென நகரசபையின் 2025ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 7மில்லியன் ரூபாய் நிதியை இந்த தேவைப்பாடுகளுக்கு பயன்படுத்த வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுற்றுச்சூழல் முன்னோடி ஜனாதிபதி பதக்கம் வழங்கும் விழா ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றது. இம்முறை 11 ஆவது தடவையாக நடைபெற்ற சுற்றுச்சூழல் முன்னோடி ஜனாதிபதி பதக்கம் வழங்கும் விழாவில் 192 சுற்றுச்சூழல் முன்னோடிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடமிருந்து ஜனாதிபதி பதக்கங்களைப் பெற்றனர். இவர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 14 மாணவர்களும் இவ்விருதைப் பெற்றனர். (படம்:மகாலிங்கம்)

## உலக சமஸ்கிருத தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்துகற்கைகள் பீட சமஸ் கிருதத்துறை பெருமையுடன் கொண்டாடும் "உலக சமஸ் கிருத தினம்" இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 5 மணிவரை யாழ்.பல் கலைக்கழக கைலாசபதி கலை யரங்கில் சமஸ்கிருதத்துறைத் தலைவர் கலாநிதி ம.பால கைலாசநாதசர்மா தலைமை யில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்பு ரையினை சமஸ்கிருதத்துறை உதவி விரிவுரையாளர் செல்வி சி.பிரபாலினி, வாழ்த்துரை யினை இந்து கற்கைகள் பீட பீடாதிபதி ச.பத்மநாபன் மற்றும் பிரதம விருந்தினர் உரையை யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறீசற் குணராசா ஆகியோர் நிகழ்த் தவுள்ளனர்.

அத்துடன் "சமஸ்கிருத காவியவியலில் குவலயானந் தம்" மற்றும் "பாஷை (L)- சமஸ்கிருத தமிழ் உறவு குறி த்த கவிதைகள்" ஆகிய இரு நூல்களின் வெளியீடும் இடம் பெறவுள்ளதுடன் நூலின் விமர்சன உரையினை இந்து நாகரிகத்துறை பேராசிரியர் ச.முகுந்தன் நிகழ்த்தவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# 10 லயன் வீடுகள் தீக்கிரையானது



(ஹற்றன்)

பூண்டுலோயா, டன்சினன் மத்திய பிரிவில் நேற்று முற் பகல் 11 மணியளவில் நெடுங் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத் தில் 10 லயன் வீடுகள் சேதம டைந்துள்ளதாக பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீப்பரவல் காரணமாக வீடுகளில் இருந்த உடமைகள் எரிந்துள்ளதோடு எவருக்கும் உயிர்சேதம் எதுவும் ஏற்பட வில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் தற் காலிக தோட்ட மண்டபம் ஒன் றில் தங்க வைக்கப்பட்டுள்ள துடன் பிரதேச செயலகம் ஊடாக உணவுகள் வழங்க ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக பிரதேசத்திற்கு பொறுப் பான கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இதேவேளை தீபற்றியமை க்கான காரணத்தை கண்ட றியாத நிலையில் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (நி)






முறிகண்டி தென்னிந்திய திருச்சபையின் 44 ஆவது ஆண்டு வழிபாடும் சிறுவர் அபிவிருத்தி நிலையை கட்டடத் திறப்பு விழாவும் கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (படம்: சப்தசங்கரி, தேவானந்தன்)



# எனது 34 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...

## நாளை (27.08.2025) ஈசுர விநாயகரின் பாற்காவடித் தினம் வாருங்கள்! வாருங்கள்!

### இதுவரை நிறைவேறாத தரிசனங்கள் நிறைவேறிட பாற்காவடி எடுத்திடுவோம் பாலாபிஷேகம் செய்திடுவோம்

### பாலாபிஷேக நேரம்: மு.ப 8.30 மணிமுதல் 10.30 மணிவரை
### சதுர்த்தி உற்சவம்: பி.ப 3.00 மணியளவில் ஆரம்பமாகி விஷேட அபிஷேக பூஜை வழிபாடுகளுடன் சுவாமி வீதி உலா நடைபெறும்.

என் அன்பு உள்ளங்களே!

தமிழர் பிரச்சினை நீண்டது, சிக்கலானது, தீர்க்கமுடியாதது... ஆனால் தீர்த்துத்தான் இருப்பேன் என்ற ஈசுர விநாயகரின் அன்றைய திருவாக்கு என்பதாகும். "தெய்வத்தால் ஆகாது எனினும் மெய்வருந்தக்கூலி தரும்" என்றவாறு ஐயாவும் ஈசுர விநாயகரை இறுகப் பற்றி பிடித்த வண்ணம் உள்ளேன். 76 வருடங்களாக தமிழர் பிரச்சினையை வைத்து ஆட்சி செய்தும் அடக்கி ஆண்டும் எமது பிரச்சினையைத் தட்டிக்கழித்து வந்த சிங்கள அரசியல் தலைவர்களுக்கு ஈசுர விநாயகர் தண்டனை வழங்கும் படலத்தை ஆரம்பித்து விட்டார். தெய்வ தண்டனையிலிருந்தும் எவரும் தப்பி விட முடியாது "அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்று நின்று அறுக்கும்" என்பதை எல்லோரும் அறிவர். இருந்தும் இதை உணர்த்த வேண்டியது ஐயாவின் கடமை. அரசியல் தர்மம் என்பதைக் கைவிட்டு அதுவும் புத்த தர்மத்திற்கு அவதூறு ஏற்படும் வகையில் அரசியலில் இலஞ்சம், ஊழல் மோசடி, அதிகார துஷ்பிரயோகம் போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு நீதிமன்றத்தால் கைது செய்யப்படுவதைப் பார்க்கும் போது இது ஈசுர விநாயகரின் தெய்வத் தண்டனை என்றே எண்ணத் தோன்றுகிறது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலை பிற்போட்டு எமது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வை வைக்குமாறு ஈசுர விநாயகர் கூறியருளினார் என்பதை தங்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றேன் தவறினால் நாடு பறிபோவது நிச்சயம். ஈசுர விநாயகரின் கூற்றை அவமதித்ததாலே ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு இந்த நிலை வந்துள்ளது. சந்திரிக்கா அம்மையாருக்கும் கண்பறிபோனதும் ஈசுர விநாயகரின் தெய்வ தண்டனையே. "கண்ணைக் கொத்திய காக்காப் பிள்ளையாரல்லவா"

தெய்வ தண்டனையிலிருந்து யாரும் தப்பி விட முடியுமா? சிங்கள அரசியல் வாதிகளே!

அப்படியானால் நீண்ட தமிழர் பிரச்சினைக்கு உடனடி அரசியல் தீர்வு காண்பதை விட வேறு வழியேயில்லை. வளமான நாடு, அழகான நாடு, வற்றாத ஜீவ நதி, வளைந்தோடும் நாடு "சொர்க்கமே என்றாலும் அது நம் நாட்டுக்கு ஈடாகுமா?..." போன்ற சிறப்புடைய நாடு சீரழிந்து போனது எதனால்? தமிழர் தேசிய இனப்பிரச்சினையால் நீண்டயுத்தம் ஏற்பட்டது. இது காரணமாக நாடு பொருளாதாரத்தில் வங்குரோத்து நிலை ஏற்பட்டது. இது காரணமாக அனைத்து மக்களும் கவலை அடைந்தனர். இன்னும் மக்கள் அமைதியின்மையாலும் நிம்மதியில்லாமலும் வாழ்க்கை நடத்துகின்றனர். மேலும் இந்த நிலை நீடித்தால் விபரீதமான விளைவுகள் நாட்டில் ஏற்படும்.

எனவே சிங்கள அரசியல்வாதிகள் உடனடியாக நீண்ட தமிழர் இனப்பிரச்சினைக்கு தகுந்த ஒரு அரசியல் தீர்வைக் காணவேண்டும். காணத்தவறின் ஈசுர விநாயகர் சர்வவல்லமை பொருந்தியவர் என்பதை இவ்வுலகிற்குத் தன்னைக் காட்ட தெய்வ தண்டனையைத் தந்திடுவார். நாட்டையும் மக்களையும் பாதுகாக்க முடியாமல் போய் விடும்.

எனவே தான் நாட்டையும் மக்களையும் பாதுகாக்கவே இன்றைய பாலாபிஷேகம் என்பதை அறியத் தருகின்றேன்.

சோழியூரான்-பிறைசூடிக்குரு
(ஆன்மீகவாதியும், சந்ததிப் பூசகரும் பரம்பரைப் பரிகாலரும்).
சிவத்திரு சோழகுமாரன்,
சிவத்திரு சோழஇராஜன்.

சோழியபுரம்
26.08.2025

(5142)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# நைஜீரிய படையினரின் தாக்குதல் 35 ஜிஹாதிகள் உயிரிழப்பு



(நைஜர்)

நைஜீரிய பாதுகாப்புப் படையினரின் தொடர் வான் வழித் தாக்குதல்களில் 35 ஜிஹாதிகள் கொல்லப் பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதலானது கேமரூன் எல்லைக்கு அருகே நடந்த வான்வழித் தாக்குதல்களில் இந்த இறப்புகள் நிகழ்ந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


நைஜீரியா மீது ஜிஹாதிகள் திட்டமிட்ட தாக்குதலைத் தடுக்க இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களில் நைஜீரியப் பாதுகாப்புப் படையினரின் தாக்குதல்களில் சுமார் 800 போராளிகள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அணுசக்தி விவகாரத்தில் அடிபணிய மாட்டோம்!

## அமெரிக்காவுக்கு ஈரான் தலைவர் பதிலடி





(டெஹ்ரான்)

அணு சக்தி விவகாரத்தில் அமெரிக்காவுக்கு ஈரான் அடிபணியாது என்று அந்நாட்டின் உச்சத் தலைவர் காமேனி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பேசிய அவர், "அமெரிக்கா கொடுக்கும் அழுத்தம் பலன் தராது. ஈரான் மீது இஸ்ரேல் நடத்திய 12 நாள் தாக்குதலால் அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடரமுடியாது. அணு சக்தித் திட்டம், தீர்க்க முடியாத பிரச்சினை" என்று தெரிவித்தார்.

கடந்த மாதம், ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே 12 நாட்கள் கடுமையான மோதல் நிகழ்ந்தது. ஈரானில் அணு விஞ்ஞானிகளையும் ஈரானில் நூற்றுக்கணக்கான மக்களையும் இஸ்ரேல் குண்டு வீசிக் கொன்றது.

பதிலுக்கு ஈரான் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலிலும் கடும் சேதங்கள் ஏற்பட்டன.

இடையில் அமெரிக்காவும் ஈரானின் 3 அணு சக்தி நிலையங்களைத் தாக்கியது.

இதன் பாதிப்புகள் இன்னும் மதிப்பிடப்படவில்லை.

இருப்பினும் அணுசக்தி நிலையங்களை முற்றிலும் அழித்ததாக அமெரிக்கா தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (நி)

# நெதன்யா

# வீதிக்கிற

ஆர்ப்பாட்டத்தின் போது "எங்கள் ஆன்மாவையும் இரத்தத்தையும் கொண்டு காசாவைக் காப்பாற்றுவோம்" என்று அவர்கள் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

சட்டவிரோதமான மற்றும் தூண்டும் வகையில் கருத்துக் களை தெரிவித்ததற்காக அவர்கள் கைது செய்யப்பட்டதாக இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட மேலும் எட்டு பேர் பட்டினியால் இறந்துள்ளனர்.

இதனால் ஒரு சில வாரங்களில் உணவுப் பற்றாக்குறையால் இறந்

ந
ஏ
அ
வே




# ரஷ்யாவிலுள்ள அணுமின் நி

# உக்ரைன் ட்ரோன் த



(கீவ்)

உக்ரைனின் 34ஆவது சுதந்திர தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்ட நிலையில் ரஷ்யாவிலுள்ள அணுமின் நிலையம் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல்களை மேற் கொண்டுள்ளது.

இதேவேளை இதற்கு முன்பு உக்ரைன் இராணுவம், தெற்கு ரஷ்யாவிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது தாக்குதல் நடத்தியிருந்த நிலையில் கடந்த 3 நாட்களாகத் தீயானது தொடர்ந்து எரிந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக முன்னெடுக்

கப்ப
முடி
அமெ
தோ
குறி
உக்
தின
லே
மீது
ரஷ்
அணு
ட்ரே
இ
நிலை
துள்
ஏ
எண
மீது
கார
தீப்
பித்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# துவை எதிர்த்து ங்கிய மக்கள்!

(டெல்அவில்)

**காசாவில் நெதன்யாகு அரசு நடத்தி வரும் இனப்படுகொலையை எதிர்த்து இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவில் மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர்.**




தவர்களின் மொத்த எண்ணிக்கை 281 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 115 பேர் குழந்தைகள்.

ஐ.நா உட்பட பிற உணவு விநியோக முறைகளை முற்றிலுமாகத் துண்டித்து. அதன் சொந்த நான்கு மையங்களை இஸ்ரேல் திறந்தது.

இந்த மையத்தை நோக்கி உணவுக்காக வந்த 2,076 பேரை இராணுவம் இதுவரை சுட்டுக் கொன்றுள்ளது.

நேற்று முன்தினம் காசா முழுவதும் நடந்த தாக்குதல்களில் 60இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் உணவுக்காகக் காத்திருந்த 22 பேர் அடங்குவர். (நி)

## விரைவில் இந்தியா செல்கிறார் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி



(டில்லி)

உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி விரைவில் இந்தியா செல்வார் என தகவல் வெளியாகியுள்ளன.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி விரைவில் இந்தியா செல்ல உள்ளதாக இந்தியாவுக்கான உக்ரைன் தூதர் போலிஷ்சுக் தெரிவித்துள்ளார்.

ஜெலென்ஸ்கியின் பயணத் திகதியை இறுதி செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா வரும் உக்ரைன் ஜனாதிபதி பிரதமர் மோடியுடன் சந்திப்பு நடத்துவார் என்றும் அப்போது போர் நிலவரம், போரை நிறுத்துவது குறித்தும் ஆலோசனை நடத்துவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதியின் இந்திய பயணம் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்தும் என போலிஷ்சுக் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு பயணம் செய்த பிரதமர் மோடி, பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இரு நாட்டு தலைவர்களிடமும் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நிலையம் மீது தாக்குதல்

கப்படுகின்ற உக்ரைன்-ரஷ்யப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அமெரிக்காவின் முயற்சிகள் தொடர் தோல்வியை சந்தித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை உக்ரைனின் 34ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட நிலையிலேயே ரஷ்ய அணுமின் நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ரஷ்யாவின் குர்ஷ்க் பகுதியில் உள்ள அணுமின் நிலையம் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் அணுமின் நிலையத்தின் ஒருபகுதி எரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தெற்கு ரஷ்யாவில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது, உக்ரைன் ட்ரோன் தாக்குதல் காரணமாக கடந்த 3 நாட்களாக தீப்பற்றிஎரிந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## முகத்தில் அதிக முடி
### கின்னஸ் இடம்பிடித்த சிறுவன்

(டில்லி)

முகத்தில் அதிக முடி கொண்டவராக, இந்தியாவைச் சேர்ந்த 18 வயது சிறுவன் ஒருவர் கின்னஸில் உலக சாதனை படைத்துள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த 18 வயதுச் சிறுவனான லலித் படிதார், முகத்தில் கிட்டத்தட்ட 95% முடியுடன் அதாவது ஆணின் முகத்தில் அதிக முடி கொண்டவராக கின்னஸில் உலக சாதனை படைத்துள்ளார்.


இதுகுறித்து ஹிந்துஸ்தான் டைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தியின்படி, மார்ச் 2025இல் வெளியிடப்பட்ட கின்னஸ் உலக சாதனை அறிக்கையில் லலித்தின் முகத்தில் ஒரு சதுர சென்றிமீற்றருக்கு 201. 72 முடிகள் இருந்துள்ளன. இது. அவரது முகத்தில் முடி வளர்ச்சி மிகவும் அடர்த்தியாக இருப்பதைக் குறிக்கிறது. லலித்துக்கு "வேர் வுல்ஃப் சிண்ட்ரோம்" எனப்படும் மிகவும் அரிதான ஒரு வகை நோய் இருப்பதாக அறிக்கை தெரிவிக்கிறது. இது அசாதாரணமாக, அடர்த்தியான முக முடி வளர்ச்சியைத் தூண்டுகிறது.

இது உலகளவில் மற்றும் பல நூற்றாண்டுகளாக அரிதாகவே ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. ஆச்சரியப்படும் விதமாக, இடைக் காலத்திலிருந்து பதிவு செய்யப்பட்ட சுமார் 50 வழக்குகளில் லலித்தின் வழக்கும் ஒன்றாகும். எனவே, சந்தேகமே இல்லாமல், கின்னஸ் அவரது தனித்துவமான நிலையை "ஒரு பில்லியனில் ஒன்று" என்று பெயரிட்டுள்ளது.

வழக்கமான வளர்ச்சியை விட முடியை மிகவும் அடர்த்தியாக வளரச் செய்கிறது. முடி வளர்ச்சி மிகவும் அடர்த்தியாக இருப்பதால் அது அவரது முக அம்சங்களை மறைக்கிறது.

இந்த நிலைக்கு 'ஹைபர் டிரிகோசிஸ்' என்ற ஓர் அறிவியல் பெயரும் உள்ளது. இந்த நிலை அசாதாரணமானது என்பதால், ஆரம்பத்தில் இது அவரது சகாக்களிடமிருந்து எதிர்மறையான கவனத்தை ஈர்த்தது.

தன்னைச் சுற்றியுள்ள மக்கள் முன்பு தன்னைக் கண்டு பயந்ததாக லலித் கின்னஸிடம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர், "அவர்கள் என்னைப் பார்த்து பயந்தார்கள். ஆனால் அவர்கள் என்னை அறிந்து கொண்டு என்னுடன் பேசத் தொடங்கியபோது, நான் அவர்களிடமிருந்து அவ்வளவு வித்தியாசமாக இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.



வெளிப்புறமாகத் தான் நான் வித்தியாசமாகத் தெரிந்தேன். இந்த அங்கீகாரம் கிடைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதேநேரத்தில், இந்த தோற்றம் எனக்குப் பிடித்திருக்கிறது. இதை நான் மாற்ற விரும்பவில்லை" எனத் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகுகளை மீட்பதற்காக யாழ்.வந்த தமிழக மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் உள்ள தமது படகுகளை நேரில் பார்வையிட்டு, அதனை மீட்டுச் செல்வது தொடர்பில் ஆராய்வதற்காக தமிழகத்தில் இருந்து 14 பேர் கொண்ட குழுவினர் படகில் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

கடந்த 2022 - 2023ஆம் ஆண்டு காலப் பகுதிகளில், இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்தில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகுகள் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

குறித்த வழக்கு விசாரணைகள் நிறைவுற்று, நீதிமன்றினால், படகுகள் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், அவற்றை மீண்டும் தமிழகம் எடுத்துச் செல்வதில் சிக்கல் நிலைமைகள் காணப்பட்டமையால், அது தொடர்பில் படகு உரிமையாளர்கள், இந்திய மற்றும் இலங்கை அரசாங்கத்திடம் தமது படகுகளை தம்மிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி இருந்தனர்.

இந்நிலையில், இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சு கடந்த வாரம் படகுகளை படகின் உரிமையாளர்கள் மீட்டு இந்தியாவிற்கு எடுத்து செல்ல அனுமதி அளித்தனர்.

அதனை அடுத்து, நேற்று திங்கட்கிழமை இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 14 பேர் கொண்ட குழு விசைப்படகு ஒன்றில் யாழ்ப்பாணம் நோக்கி வருகை தந்தனர்.

அவர்களை இலங்கை - இந்திய கடல் எல்லையில் வைத்து, இலங்கை கடற்படையினர் பொறுப்பேற்று, காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து அவர்களின் படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்திற்கு அழைத்து செல்லவுள்ளனர்.

அங்கு நீதிமன்றினால் விடுவிக்கப்பட்ட ஏழு படகுகளையும் பார்வையிட்டு, அவற்றின் தரங்களை பரிசோதித்து, மீட்டுச் செல்ல கூடிய படகுகளை மீட்டுச் செல்லவும் ஏனைய படகுகளை மீட்பது தொடர்பில் ஆராய்ந்து செல்லவுள்ளனர்.

குறித்த குழுவினர் இன்றைய தினம் மீண்டும் இராமேஸ்வரம் நோக்கி பயணிக்கவுள்ளனர். அவர்களை இலங்கை கடற்படையினர், இலங்கை - இந்திய கடல் எல்லை வரையில் அழைத்து சென்று இந்திய கடலோர காவற்படையினரிடம் ஒப்படைக்கவுள்ளனர். (8-33)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1985- இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி-பா-22<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L,பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15948 | பிறப்பு-1992-இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி-பா- 62 1/4<br>7இல்செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: College, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15975 |
| பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>2இல்செவ்<br>கி-பா- 16<br>உயரம்:6'1"<br>தகைமை/தொழில் -Electrical Engineer (India)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15949 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்-திருவோணம்<br>3இல்சூரிசெவ்<br>கி-பா-5 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HNDIT,BSc,AQA Engineer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15978 |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:IT,Shop(பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/15950 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்-பூரட்டாதி<br>கி-பா-88<br>8இல்செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BBA,Accounting<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15982 |
| பிறப்பு: 1999- இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L,Driver<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15953 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்-அத்தம்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BBA(Final year)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/15983 |
| பிறப்பு: 1990- இந்து<br>நட்சத்திரம்-ஆயிலியம்<br>உயரம்:6"<br>தகைமை/தொழில்: A/L, Restaurant (Canada)<br>எதிர்பார்ப்பு: Only Canada<br>தொ.இ: B/15956 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்- பூசம்<br>கி-பா-33 1/2<br>உயரம்-5'4"<br>தகைமை/தொழில்: BSc, Senior Software, Engineer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15984 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 433



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மாயை

ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன்.

அவர் சொன்னார்.

"இந்த உலகத்தை "மாயை" என்று மகான்கள் எல்லாம் சொல்கிறார்களே அதை நான் நம்பமாட்டேன் சார்" என்றார்.

"என்ன இது. இப்படித் திடீர் என்று சொல்கிறீர்களே?" என்றேன்.

"என்ன சார் பின்னே? இந்த உலகத்திலே எவ்வளவு காரியங்கள் நடந்துகொண்டிருக்கிறது? எல்லாவற்றையும் நாம் கண்கூடா பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும்போது இதைப் போய் மாயை என்று சொன்னால் எப்படி?" என்றார்.

"மாயை" என்றால் ஏதோ அடியோடு இல்லாத ஒன்று அப்படி என்று அவர் நினைக்கிறார். அதனாலே அவர் அப்படிச் சொல்கிறார்.

"மாயை" என்பது அடியோடு இல்லாத ஒன்று இல்லை!

இப்போது முயல் கொம்பு. குதிரைக் கொம்பு என்று சொல்கிறோம். அப்படி ஒரு பொருள் அடியோடு இல்லை! ஆனால்

மாயை என்பது அப்படி இல்லை!

"மாயை" என்பது எப்படி என்றால்

அது இருக்கின்றதாக நினைக்கின்ற வரைக்கும் இருக்கின்றதாகத் தோன்றும்.

"கானல் நீர்" மாதிரி என்று வைத்துக்கொள்ளுங்களேன் கானல் நீர் கண்ணுக்குத் தெரியும். அதாவது தூரத்திலே தண்ணீர் இருக்கின்ற மாதிரித் தெரியும். ஆனால் உண்மையிலே அங்கே தண்ணீர் இல்லை! அங்கே தெரியும் தண்ணியைக் குடித்து நாம் தாக சாந்தி செய்ய முடியாது.

கானல் நீர் என்பது உண்மையான தண்ணீர் இல்லை என்று தெரிந்தவர்களுக்குக்கூட கானல் நீர் தெரியத்தான் செய்கிறது! அங்கே தண்ணீர் இல்லை என்று நமக்கு நல்லாத் தெரியும். இருந்தாலும் இருக்கின்றதாகவே தான் தோன்றும்! அதுதான் மாயை! இந்த உலகை மாயம் என்று உணர்ந்த ஞானிகளுக்குக்கூட இந்த லோகம் தெரியத்தான் செய்கிறது!

ஒரு கயிறு கீழே கிடக்கு சார். இருட்டு நேரம். அந்தக் கயிறைப் பாம்பு என்று தவறாக நினைத்துவிடுகிறோம். அப்போது என்ன ஆகும்? நிஜமான பாம்புக்கு உண்டாகின்ற அத்தனை பயத்தையும் பதற்றத்தையும் அது நம்மிடம் உண்டாக்கி விடுகிறது.

அதே மாதிரி.

சத்தியமாக உலகம் உண்மையிலேயே நிரந்தரம் இல்லை என்றால் கூட, அதை நாம் சத்தியம் என்று நினைக்கின்ற வரைக்கும் அது மாதிரியே எல்லாக் காரியமும் நடக்கிறது!

நாம் கனவு காண்கிறோம். கனவு காணுகின்ற வரைக்கும் அந்தக் கனவு நிஜமாகத் தான் இருக்கும். முழித்ததற்குப் பிறகு அது "ஒன்றுமில்லை!" என்று ஆகிடும் நாம் அஞ்ஞானத்திலே தூங்கிக் கொண்டிருக்கின்ற வரைக்கும் உலகம் மெய்யாக இருக்கும்! நாம் ஞான நிலையிலே முழித்ததற்குப் பின்பு அது மறைந்தே போய்விடும்!

கிளிஞ்சல் வெய்யிலை பார்க்கும்போது வெள்ளி மாதிரி மினுமினுக்கும்! அதுபோல பிரம்மத்தில், மாயையின் காரணமாக உலகம் தற்காலிகமாக மினுமினுக்குது! அவ்வளவுதான்.

ஞானிகளுக்கு இந்த உலகம் இனிப்பாகவும் நமக்கு கசப்பாகவும் தெரிகிறதே அது எப்படி?

சர்க்கரையை உபயோகப்படுத்தி பாகற்காய் மாதிரியே ஒரு பொம்மை செய்து வைத்திருக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள் அதாவது சர்க்கரை பொம்மை பாகற்காய் மாதிரி இருக்கிறது. விடயம் தெரியாத குழந்தை அதை பாகற்காய் என்று நினைத்துக்கொண்டு ஓடிப்போய்விடும். விடயம் தெரிந்தவனுக்கு அது சர்க்கரை என்பது தெரியும்! அது மாதிரித் தான் ஞானிகளுக்கு இவ்வுலகம் இனிப்பு! நமக்குக் கசப்பு.

இவ்வளவும் காமகோடி பீடாதிபதி பரமாச்சாரியார் சொல்கிறார். அதனாலே இந்த உலகத்திலே நாம் எப்படி வாழ வேண்டும் என்று கேட்டால் தாமரை இலை தண்ணீர் போல் வாழணும் என்கிறார்கள். பெரியவர்கள். ஒட்டாமல் வாழ்கின்ற வாழ்வு அது தாமரை இலை, தண்ணீரிலேயே தான் இருக்கும். இருந்தாலும் தண்ணீர் இதிலே ஒட்டாது. ஒரு துளி அது மேலே விழுந்தாலும் அது நிக்காது ஓடிப்போயிடும்.

இந்தக் காலத்துப் பிள்ளைகள் அதற்குப் புது விளக்கம் கொடுக்கிறார்கள். கொஞ்ச நாளைக்கு முன்னால் ஒரு சின்னப் பெண் என்னிடம் வந்து "இன்று ஒரு தகவலிலே என்னென்னமோ சொல்கிறீர்களே." தாமரை இலையிலே தண்ணீர் நிற்காது! ஏன் தெரியுமா சார்?" என்று கேட்டது. "நீயே சொல்லு" என்றேன்.

"தாமரை இலையிலே தண்ணீர் நிற்காது ஏனென்றால் அதற்குக் கால் கிடையாது!" என்றார் சார்! உலகமே மாயம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் எதிர்வரும் 30 ஆம் திகதி

# சர்வதேச நீதி கோரி பேரணி

(மன்னார்)

**சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30 ஆம் திகதி சர்வதேச நீதி கோரி வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள மக்கள் எழுச்சிப் பேரணிக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.**

மன்னாரில் நேற்று காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30 ஆம் திகதி சர்வதேச நீதி கோரி வடக்கு கிழக்கில் மக்கள் எழுச்சிப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவிற்கு முன்பாகவும், கிழக்கில் மட்டக்களப்பிலும் குறித்த பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்கா விற்கு முன்பு எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10 மணிக்கு பேரணி ஆரம்பமாகி செம்மணி வரை குறித்த பேரணி இடம்பெற உள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து உலக நாடுகள் தமது கவனத்தில் கொண்டு சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து குறித்த பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 14 வருடங்களுக்கு மேலாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் வீதிக்கு இறங்கி எத்தனையோ போராட்டங்களை முன்னெடுத்து வந்தோம்.

சர்வதேச நாடுகளின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதும் எமக்கான நீதி இது வரை கிடைக்கவில்லை.

செம்மணி மனித புதைகுழியில் இருந்து நூற்றுக் கணக்கான உறவுகள் எலும்புக் கூடுகளாக மீட்கப்படுகின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்று இது வரை எமக்கு தெரியவில்லை.

எமது பிள்ளைகள், உறவுகள் எங்கேயோ இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம்.

எனவே எமக்கு சமூக செயற்பாட்டாளர்கள் ,தேசியத்தை நேசிக்கும் அனைவரும் எமக்கு குரல் கொடுக்க அணி திரண்டு வர வேண்டும்.

நாங்கள் தனித்து போராடுகின்றமையினாலேயே எமக்கு நீதி கிடைக்கவில்லை என்கிற தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையிலே எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் சர்வதேச நீதி கோரிய மக்கள் எழுச்சிப் பேரணி முன்னெடுக்கவுள்ளது. எனவே அனைத்து உறவுகளும் எமது சர்வதேச நீதி கோரிய போராட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (8-285)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வேணி கிருபாகரனின் "காலம் கடந்த கதைகள்" எனும் சிறுகதை தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் அருகாமையிலுள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் வேதநாயகன் தபேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வாழ்த்துரையினை திருமதி ஞானசீலன் சிறீதர், வெளியீட்டுரையினை திருமதி வேணி கிருபாகரன், மதிப்பீட்டுரையினை திருமதி உதயலதா நவதீசன் மற்றும் நன்றியுரையினை செல்வன் சேயோன் கிருபாகரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 300 | 350 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 100 | 200 | 140 | 150 |
| தக்காளி | 300 | 300 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 350 | 350 | 230 | 400 |
| கரட் | 400 | 500 | 400 | 500 |
| பூசணி | 100 | 80 | 60 | 80 |
| புடோல் | 100 | 100 | 80 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 230 | 320 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 120 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 120 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 280 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 200 | 250 | 400 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 180 | 250 |
| பீற்றூட் | 150 | 250 | 100 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 400 | 180 | 300 |
| போஞ்சி | 600 | 600 | 450 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 140 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 350 | 400 | 300-400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 150 | 120-180 | 160-200 |
| இராசவள்ளி | 800 | 500 | 450 | 900 |
| வெங்காயப்பூ | 300 | 150 | 250 | 300 |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 180 | 100 | 80 |
| வல்லாரை | 100 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 80 | 200 |

# இராசிபலன்

26.08.2025
ஆவணி10, செவ்வாய்க்கிழமை
திருதியை பிற்பகல் 2.09 மணி வரை

அத்தம் முழுவதும்
சுப நேரம் 10.35-12.05 மணிவரை
இராகு காலம்3.05-4.35 மணிவரை

சந்திராஷ்டமம்
சதயம்.

வளவன்

**மேஷம்** கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் பெருகும், தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** நேற்றைய பிரச்சினை ஒன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், நிதிநிலை உயரும் வாய்ப்புண்டு, உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும்

**துலாம்** ஒரு சில வேலைக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்படலாம், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், தேக நலனில் கவனம் தேவை

**மகரம்** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்

**ரிஷபம்** அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்,

**சிம்மம்** ஆடம்பர பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பேச்சில் இன்மை தென் படும், மதிப்பும் மரியாதையும் உயரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** வீட்டுத் தேவை எளிதில் பூர்த்தியாகும், பொருளாதாரநிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்

**கும்பம்** மற்றவர்களிடம் பேசும் போது நிதானம் காட்டுவது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மிதுனம்** பொதுக்காரியங்களில் நாட்டம் கூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பணவரவு திருப்தி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்

**கன்னி** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**தனுசு** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொழில் ரீதியாக புதிய முதலீடுகளை செய்யும் எண்ணம் உருவாகும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.


**மீனம்** விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் என்ற ஒன்று இருப்பதால்தான் சுகம் இருப்பது தெரிகிறது



## கல்கியின் பாகம் - 4
# பொன்னியின் செல்வன்
### காவியத் தொடர் 852



பிறகு உயர் குலத்துப் பெண்மணி ஒரு வரைத் திருவையாற்றிலிருந்து அழைத்து வரவேண்டு மென்றும், அதற்குப் பழு வூர் அரண்மனையின் மூடு பல்லக்கு ஒன்றும், சிவிகை தூக்கிகளும் வேண்டும் என் றும் சொல்லி அனுப்பினார். சின்னப் பழுவேட்டரையர் இந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றினார். ஆனால் மனத்திற்குள் 'இந்தப் பிரம் மராயன் ஏதோ சூழ்ச்சியில் ஈடுபட்டிருக்கிறான். அவ்வி தம் மூடுபல்லக்கில் வைத்து வரவழைக்கக்கூடிய உயர் குடும்பத்துப் பெண்மணி யார்? எதற்காக இங்கே வரு கிறாள். இதை எப்படியும் கண்டுபிடிக்க வேண்டும். இத்த கைய சந்தர்ப்பத்தில் தமைய னார் இங்கே இல் லாமற் போய்விட்டாரே?' என்று அவர் மனம் சஞ் சலப்பட்டது.

முதன்மந்திரி அநிருத்த ரின் மாளிகைக்கு மூடுபல்லக் கில் வந்தது யார் என்று தெரி ந்து கொள்ள இன்னொரு மனிதனும் ஆவல் கொண்டி ருந்தான். அவன் வேறு யாரும் இல்லை. அநிருத்த பிரம்மரா யரின் அருமைச் சீடனான ஆழ்வார்க்கடியான்தான்.

பெருமழை பெய்த அன் றைக்கு மறுநாள் காலையில் அநிருத்தப் பிரம்மராயர் ஸ்நா னபானம், ஜபதபம், பூஜை, புனஸ்காரம் ஆகியவற்றை முடித்துக் கொண்டு மாளி கையில் முன் முகப்புக்கு வந்து சேர்ந்தார். தம்மைக் காண்பதற்கு யாரார் வந்து காத்திருக்கிறார்கள் என்று சேவகனைப் பார்த்து கொண்டு வரச் செய்தார். காத்திருந்த வர்களில் ஆழ்வார்க்க டியான் ஒருவன் என்று தெரிந் ததும், அவனை உடனே கூட்டி வரும்படி ஆக்ஞாபித்தார்.

ஆழ்வார்க்கடியான் தன் குருநாதரின் முன்னால் விரைந்து வந்து பயபக்தி வினயத்துடன் நின்றான்.

"திருமலை! போன காரி யம் என்ன ஆயிற்று?" என்று அநிருத்தர் கேட்டார்.

"குருவே! மன்னிக்க வேண் டும் தோல்வியடைந்து திரும் பினேன்" என்றான் ஆழ்வார் க்கடியான்.

"ஒருவாறு நான் எதிர்பார்த் ததுதான் ஆதித்த கரிகால ரைச் சந்திக்கவே முடியவில் லையா?"

"சந்தித்தேன் ஐயா! தாங் கள் சொல்லச் சொன்ன செய் திகளையும் சொன்னேன், ஒன்றும் பயனில்லை. இளவ ரசரைக் கடம்பூர் அரண் மனைக்குப் போகாமல் தடுக்க முடியவில்லை"

"இளவரசர் இப்போது கடம்பூரில்தான் இருக்கி றாரா?"

"ஆம், குருவே! சம்புவ ரையரின் மாளிகையில் அவர் பிரவேசித்ததைப் பார்த் துவிட்டு தான் வந்தேன். இளவரசருக்கு சம்புவரையர் இராஜோபசார வரவேற்பு அளித்தார். சுற்றுப்புறத்து மக்கள் காட்டிய உற்சாக த்தை வர்ணிக்க முடியாது."

"அதெல்லாம் எதிர்பார் க்கக் கூடியதுதான். கடம் பூர் மாளிகைக்கு இன்னும் யார்யார் வந்திருக்கிறார் கள்?"

"இளவரசருடன் பார்த் திபேந்திரனும் வந்தியத் தேவனும் வந்திருக்கிறார் கள். இங்கிருந்து பெரிய பழுவேட்டரையர் இளைய ராணியுடன் வந்திருக்கிறார். இன்னும் நடுநாட்டையும் திருமுனைப்பாடி நாட்டை யும் சேர்ந்த பல சிற்றரசர் களையும் அழைத்திருப்ப தாகக் கேள்விப்படுகி றேன்"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## திருட்டுப் பட்டம்



(நேற்றைய தொடர்ச்சி)

சொல்லிவிட்டு சென்றதையும் சொன் னார்கள். வகுப்பாசி ரியர் திகைத்தார், சாமிநாதன் முதல் வகுப்பிலிரிந்து இங்கு படித்து வருப வன். இதுவரை அவ னைப்பற்றி எந்த பழி சொல்லும் வந்த தில்லை. இப்பொ ழுது என்ன செய்வது? நேராக தலைமையா சிரியரை பார்க்க சென்றார்.

இருவரும் நீண்ட நேரம் கலந்து பேசி சாமிநாதனை விசா ரித்து விடுவது என முடிவு செய்தனர்.

சாமிநாதனுக்கு அதிர்ச்சியாக இருந் தது. இதுவரை இப் படி ஒரு பழி சொல் வந்ததில்லை. தலை மையாசிரியர் கூப் பிட்டு இவனை விசா ரித்தவுடன் நிலை குலைந்து போனான்.

புத்தகப்பையில் வைத்த பணம் காண வில்லை, புத்தகப் பையை இவன் தான் பார்த்துக் கொண்டி ருந்தான்.

அதனால் தொலை ந்த பணத்துக்கு இவன் பதில் சொல்லியாக வேண்டும். என்ன செய் வது நான் எடுக்க வில்லை என்று சொன் னால் பணம் எப்படி புத்தகப்பையிலிருந்து காணாமல் போகும் என்று கேள்வி கேட் பார்கள்.

நாளை மறு நாள் ஆண்டு விழா, விழா விற்கு வரப்போகும் பொலிஸ் அதிகாரி மகனுடைய பணத்தை காணவில்லை என் றால் இந்த பள்ளி யைப் பற்றி என்ன நினைப் பார்?

தலைமையாசிரியர் சாமிநாதனிடம் நாளை வரும்பொழுது கட்டாயம் இதற்கு நீ பதில் சொல்லியாக வேண்டும் என்று சொல்லிவிட்டார்.

மிகுந்த வருத்தத் துடன் வீட்டுக்கு வந்த சாமிநாதனின் முக த்தை பார்த்த அவன் அம்மா என்னவென்று விசாரித்தார்.

சாமிநாதன் நடந் ததை சொன்னான், அப்பா வரட்டும் நீ கவலைப்படாதே என்று ஆறுதல் கூறி னார் சாமிநாதனின் தாய்.

அப்பா வந்தவுடன் நடந்த விடயங்களை கேட்டார். நாளை இதற்கு ஒரு வழி செய் கிறேன், நீ நிம்ம தியாய் போய் தூங்கு என்று சொன்னார்.

மறு நாள் வருத்தம் மிகுந்ததாலும், என்ன செய்வது என்ற பயத் தாலும் சாமிநாதன் பள்ளிக்கு செல்ல பயந் தான். அவன் அப்பா ராம் பிரசாத்தின் அப்பா பணிபுரியும் பொலிஸ் அலு வலகத்தில் சென்று நடந்ததை சொன் னார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெரிய வேலையை அரைகுறையாகச் செய்து முடிப்பதை விட, ஒரு சிறிய வேலையை நன்றாகச் செய்து முடிப்பது சிறந்தது. - பிளேட்டோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மந்தரையின் கூன் முதுகில் மண் உருண்டை போட்டதனால்...

தசரதச் சக்கரவர்த்தியின் மனைவியான கைகேயியின் தோழி மந்தரை. இயல்பிலேயே அவளின் முதுகு கூன் விழுந்ததன் காரணமாகக் கூனி என்றழைக்கப்பட்டாள்.

கூனியின் கூன் முதுகில் பாலகன் இராமன் மண் உருண்டைகளை எறிந்து மகிழ்ந்து கொள்வான்.

இதனால் இராமர் மீது மந்தரை கடும் கோபமுற்றிருந்தாள். எனினும் சக்கரவர்த்தி மகன் என்பதால், இராமனைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் அவளால் முடியவில்லை.

அதேநேரம் தன் கூன் முதுகில் மண் உருண்டைகளைப் போட்ட இராமனின் செயலை அவளால் மறக்கவும் முடியவில்லை.

இதன் காரணமாக இராமனைப் பழிதீர்க்கக் காத்திருந்த கூனிக்கு, இராமனுக்கு முடிதரிக்கும் பட்டாபிஷேக நாள் வந்துற்றது.

அவ்வளவுதான் எப்படியும் இராமரின் பட்டாபிஷேகத்தைத் தடுத்து நிறுத்தி, அவனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டும். கூடவே பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் என முடிவு கட்டினாள். அதன் பொருட்டு தன் தோழியான கைகேயியைச் சந்திக்கின்றாள்.

இராமனுக்கு முடிசூட்டினால், உன் கௌரவம் எல்லாம் போய்விடும். நீயும் உன் மகன் பரதனும் நாடேக வேண்டிவரும்.

ஆகையால் இராமனின் பட்டாபிஷேகத்தைத் தடுத்து நிறுத்தி பரதனை அரசனாக்குக! என்றாள்.

கூனியின் கூற்றை ஏற்க மறுத்த கைகேயியை ஒரு மாதிரியாக இணங்க வைத்த மந்தரை; தசரத மன்னன் உனக்கு இரண்டு வரம் தருவதாகக் கூறினான் அல்லவா! அந்த இரண்டு வரத்தையும் இப்போது கேள்.

அந்த இரண்டு வரங்களில் ஒன்று இராமன் காடேக வேண்டும். மற்றையது பரதன் நாடாள வேண்டும்.

ஆம், இராமர் காடு செல்வதற்கும் அவர் அனுபவித்த அத்தனை துன்பங்களுக்கும் பின்னணி மந்தரை எனும் கூனி என்பது இங்கு உணர்தற்குரியது.

ஆக, அவதார புருசரான இராமபிரானாயினும் மற்றவர் மனம் நோக நடந்து கொள்ளக் கூடாது. அவ்வாறு நடந்தால், அது பழியாக வந்து சேரும் என்ற தத்துவத்தை எடுத்துக் கூறுவதே இராம காவியமாகும்.

இதை நாம் இப்போது கூறும்போது இஃது எதற்காக? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

பிரதமராக, ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க ஆட்சி அதிகாரம் தன்னிடம் இருக்கிறது. என்னை எவராலும் எதுவும் செய்ய முடியாது என்ற மமதையில் தனக்குப் பிடிக்காதவர்களை கண்டபாட்டில் தூற்றியிருந்தார்.

அவ்வாறு அவரால் தூற்றப்பட்ட – மிகவும் தரக்குறைவான வார்த்தையால் தூஷிக்கப்பட்ட ஒருவர், தகுதி வாய்ந்த பதவிக்கு வந்தபோது அவர் சட்டத்தை நிலைநாட்ட முற்பட்டதன் விளைவு தான், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது என்பதை அனைவரும் உணர்ந்து அதை தக்க பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

# ரணிலின் கைது ஜனநாயக அரசியலுக்கு விடுக்கப்பட்டுள்ள வலுவான சவால்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவின் கைது தனிப்பட்டதொரு சம்பவமல்ல. அது ஜனநாயக அரசியலுக்கு விடுக்கப்பட்டுள்ள வலுவான சவால் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதை அடுத்து எழுந்துள்ள அரசியல் நிலைமை குறித்து கலந்துரையாட எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களினது கூட்டம் ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை (25) நடைபெற்றது.

அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்கவின் கைது தனிப்பட்டதொரு சம்பவமல்ல, மாறாக ஜனநாயக அரசியலுக்கு விடுக்கப்பட்டதொரு வலுவான சவாலாகும்.

இந்தச் சவாலை எதிர்கொள்ள சகல எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியமாகும்.

இதன் பொருட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல அரசியல் கட்சிகளுடனும் குறுகிய கால மற்றும் நீண்டகால வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு இந்தக் கலந்துரையாடல் கூட்டப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில் பேசிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இத்தருணத்தில் இரண்டு முக்கிய பிரச்சினைகளுக்கான பதில்களைத் தேட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

முதலாவது ரணில் விக்கிரமசிங்கவை விடுவிப்பதற்கான வேலைத்திட்டமாகும் என்றும் இரண்டாவதாக நாட்டின் ஜனநாயக ரீதியிலான அரசியலுக்கு விடுக்கப்பட்டுள்ள சவாலை வெற்றி கொள்வதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் நிமித்தம், சகல அரசியல் கட்சிகளும் தங்கள் அரசியல் கருத்துக்களை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றுபட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இங்கு சுட்டிக்காட்டினார். (ம-7)

# மட்டக்களப்பு குருக்கள்மடம் மனிதப் புதைகுழியை

## அகழ்வதற்கு நீதிமன்றம் அனுமதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் 1990 ஆம் ஆண்டு குருக்கள் மடத்தில் வைத்து அப்பாவி முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று (25) திங்கட்கிழமை களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற நீதிபதி ஜே.பீ ஏ.ரஞ்சித்குமார் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

1990ஆம் ஆண்டு புனித ஹஜ்யாத்திரையை முடித்துக் கொண்டு கல்முனை வழியாக காத்தான்குடிக்குப் பயணம் செய்த அப்பாவி முஸ்லிம்கள், ஆயுததாரிகளால் கடத்தப்பட்டு குருக்கள் மடத்தில் வைத்துக் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பம் சார்பாக, AMM. ரவூப் என்பவரால், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் விசாரணையே நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ள படி, உரிய இடத்தில் புதைக்கப்பட்டுள்ள மனித எச்சங்களைத் தோண்டி எடுப்பதற்கான கட்டளையை நீதவான் நீதிமன்ற நீதிபதியால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மேலதிக நடவடிக்கைகளை களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## நல்லூர்த் தேர் விடுமுறைக்காக சனியன்று பதில் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு கடந்த 21ஆம் திகதி யன்று யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு விடுமுறையளிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கான பதில் பாடசாலை நாளாக எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் அறிவித்துள்ளார். (ம-7)

## அரச நிதி முறைகேடு குற்றம் அரசியல் பழிவாங்கல் அல்ல

### ரணிலின் கைது தொடர்பில் நீதியமைச்சர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை அரசியல் பழிவாங்கலல்ல சட்டத்தின் முன் அனைவரும் சமமாக நடத்தப்படுவார்கள். எவருக்கும் சிறப்பு சலுகை வழங்கப்படமாட்டாது என நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்ட குற்றச்சாட்டின் பிரகாரம் தான் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டார். நாட்டின் பொதுச் சட்டம் அனைவருக்கும் பொதுவானது. முன்னாள் ஜனாதிபதிகளாயினும் நாட்டின் சட்டத்துக்கு கட்டுப்பட்டே ஆக வேண்டும்.

எவரையும் பழிவாங்க வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு கிடையாது. நீதிமன்றம் சுயாதீனமாகச் செயற்படுகிறது.

விமர்சனங்களை முன்வைத்துக் கொண்டிருப்பவர்கள் நீதிமன்றத்தை நாடி தமது தரப்பு நியாயத்தை எடுத்துரைக்கலாம் என்றார். (ம-7)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தவரின் சடலத்தை பொறுப்பேற்குமாறு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த வருடம் நவம்பர் மாதம் முதலாம் திகதி அன்று நினைவாற்றல் குன்றிய நிலையில் அனுமதிக்கப்பட்ட மந்திகையைச் சேர்ந்த விஜயரத்தினம் சிறீதரன் (வயது - 72) என்பவரைப் பராமரிக்க உறவினர் எவரும் முன்வராதமையால் கைதடி முதியோர் இல்லத்தில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த 22ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

தற்போது உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே இவரது உறவினர்கள் யாராவது இருப்பின் இருவார காலத்துக்குள் அவரது சடலத்தை பொறுப்பேற்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 46

**சொக்கன்**

உதாரணமாக யெஹுதா கில் என்று ஒருவர் 1970 ஆம் ஆண்டு மொசாட்டில் இணைந்தார். ரொம்பச் சுறுசுறுப்பாகச் செயற்பட்டுப் பல முக்கியமான தகவல்களைத் திரட்டிக் கொடுத்தார். இதனால் மொசாட் வட்டாரங்களில் அவருக்கு ரொம்ப நல்ல பெயர். நிறையப் பிரமோஷன். சம்பள உயர்வு. போனஸ். என்று மனிதர் ஆனந்தமாக வாழ்ந்தார்.

பதினைந்து வருடங்கள் கழித்து யெஹுதா மொசாட்டுக்கு அனுப்பிய ஒரு செய்தி சிரியா இஸ்ரேல்மீது போர் தொடுக்கப்போகிறது!

இதைப் படித்த இஸ்ரேல் ராணுவ அதிகாரிகள் பரபரப்பாகி விட்டார்கள்சிரியாவின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுப்பதற்கான ஏற்பாடுகள் ஒருபக்கம் அவங்க நம்மை அடிக்கறதுக்கு முன்னால் நாம் முந்திக் கொண்டால் என்ன? என்கிற வீர உரைகள் இன்னொரு பக்கம்.

இதற்கு நடுவே யாரோ அந்தச் சந்தேகத்தை எழுப்பினார்கள். நிஜமாகவே சிரியாக்காரர்கள் நம்மைத் தாக்கப் போறாங்களா? நம அதை உறுதி செய்து கொள்ள வேண்டாமா?

எதுக்கு? அதான் மொசாட்டிலே இருந்து விபரமா ரிப்போட் அனுப்பியிருக்காங்களே! ஒரு வேளை அந்த ஏஜென்ட் சொல்றது பொய்யா இருந்தா?


இந்தக் கோணத்தில் விசாரிக்க ஆரம்பித்த போதுதான் யெஹுதா கில்லின் குட்டு வெளிப்பட்டது. சிரியாவின் ராணுவ நடவடிக்கைகள் போர் முன்னேற்பாடுகள் என்று அவர் கொடுத்த விபரங்கள் எல்லாமே தவறானவை என்பது தெரியவந்தது.

திகைத்துப்போன மொசாட் யெஹுதாவின் மற்ற ரிப்போட்களைத் தூசு தட்டி எடுத்துச் சரிபார்க்க ஆரம்பித்தது. அவ்வளவும் டூப்,பொய், கப்ஸா, டுபார், க்கூர், டகால்டி, ரீல்!

உளவாளிகள் திரட்டுகின்ற தகவல்கள் எல்லாமே உண்மையாக இருக்கவேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. அவ்வப் போது ஊகங்களின் அடிப்படையில் தங்களுக்குக் கிடைக்கிற விடயங்களையும் அனுப்பி வைப்பார்கள். அதன் பிறகு நம் ஊர் வானிலை அறிக்கைகளைப் போல அவை நடக்கலாம் நடக்காமலும் போகலாம்.

ஆனால் யெஹுதா கில் விடயம் அப்படியில்லை இதுவரை அவர் அனுப்பிவைத்த அத்தனை தகவல்களிலும் ஏதோ சில்மிஷம் தெரிந்தது. உண்மையில் இத்தனை வருடங்களாக அவர் மொசாடுக்காகக் களத்தில் இறங்கி வேலை பார்க்கவே இல்லை. உட்கார்ந்த இடத்தில் தன்னுடைய கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டிருக்கிறார். அப்போதைக்கு மனத்தில் என்னவெல்லாம் தோன்றுகிறதோ அதையெல்லாம் உளவுக் குறிப்புகளாக அனுப்பி வைத்திருக்கிறார்.

இன்னொரு கொடுமை இந்தத் தகவல்களைத் திரட்டிக் கொடுத்த நண்பர்களுக்குப் பணம் தரவேண்டாமா? இந்தக் காரணத்தைச் சொல்லிச் சொல்லி மொசாட்டிடமிருந்து ஏகப்பட்ட பணத்தைச் சுருட்டிப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டிருக்கிறார் யெஹுதா.



யோசித்துப்பாருங்கள் ஒரு வேளை யெஹுதா சொன்ன தகவல்களை உண்மை என்று நம்பி இஸ்ரேல் உடனடியாகச் சிரியாவின்மீது படையெடுத்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? தனி மனிதர் ஒருவருடைய பேராசையால் அநாவசியமாக ஒரு போர் தூண்டப்பட்டிருக்கும். இதனால் ஏற்படக்கூடிய உயிரிழப்புகள் சேதத்துக்கெல்லாம் மொசாட் பொறுப்பேற்குமா?

இந்தச் சம்பவத்துக்குப்பிறகு மொசாட் தன்னுடைய ஏஜென்ட்களைக் கூடுதல் கவனத்துடன் கண்காணிக்க ஆரம்பித்தது. அவர்கள் அனுப்பும் தகவல்களை இன்னொரு உளவாளியைக் கொண்டு உறுதிப்படுத்தும் Dobule check வழிமுறைகள் அமுல்படுத்தப்பட்டன. இஸ்ரேல் அரசாங்கத்துக்கு இராணுவத்துக்கு, மொசாட் அனுப்புகிற அறிக்கைளில் ஒவ்வொரு தகவல்களையும் உறுதிப்படுத்தப்பட்டது. நம்பகமானது நிச்சயமில்லாதது என்று தெளிவாகக் குறப்பிட ஆரம்பித்தார்கள்.

ஆனால் இதுமாதிரி சறுக்கல்களால் இஸ்ரேலில் மொசாட்டின் முக்கியத்துவம் நிச்சமாகக் குறையப் போவதில்லை. இன்றைக்கும் அந்த ஊர் அரசாங்கம் இராணுவத்தின் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கிற ஓர் அமைப்பாக தான் மொசாட் இருக்கிறது!

## (அ)சாதாரண உளவாளிகள்

உலகம்முழுக்க உளவாளி என்று சொன்னவுடன் சட்டென்று நினைவுக்கு வருகிற பெயர் ஜேம்ஸ் பாண்ட்.

பலருக்கு ஜேம்ஸ் பாண்ட் ஒரு கற்பனைக் கதாபாத்திரம் என்பது கூடத் தெரியாது. அவரைமாதிரி பந்தாவாக உடை அணிந்து கொண்டு நவீன தொழில்நுட்ப சாதனங்களின் உதவியுடன் உலகைச் சுற்றி வந்து துப்பறிவதுதான் உளவாளிகளின் வேலை என்று நமக்குள் ஒரு பிம்பம் உருவாகியிருக்கிறது.

உண்மையில் உளவாளிகளுக்கென்று தனி யூனிஃபார் மெல்லாம் எதுவும் கிடையாது. ஜேம்ஸ் பாண்ட்போல எந்த விசேட அடையாளமும் இல்லாமால் பொதுஜனங்களோடு கலந்திருப்பதுதான் அவர்களுக்கு வசதி, ப்ளஸ் பாதுகாப்பு.

மொசாட் போன்ற மெகா பட்ஜெட் உளவுத்துறைகள் உலகம் முழுக்கத் தங்களுடைய சொந்த ஏஜென்ட்களை அனுப்பிக் கச்சிதமான நெட்வொர்க்க அமைக்கத் தான் விரும்புவர்கள். ஆனால் சாதாரணப் பொது மக்களின் உதவி இல்லாமல் எந்த உளவுப் பணியும் முழுமையடையாது.

ஏனெனில் நாம் எவ்வளவுதான் கவனமாக ஆட்களைத் தேர்ந்தெடுத்தாலும் அவர்கள் எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்திருக்கமுடியாது. சும்மா ரோட்டில் நடந்து போகிறவர்களின் காதுகளில் எதேச்சையாக வந்து விழும் ரகசியங்கள் நிறைய. அதையெல்லாம் எப்பேர்ப்பட்ட உளவாளியாலும் சேகரிக்க முடியாது.

அதனால்தான் உலகின் எல்லா உளவுத்துறைகளும் பொது மக்களின் உதவியைக் கணிசமாகப் பயன்படுத்திக்கொள்கின்றன. சிலரை இவர்களே சல்லடை போட்டுத் தேர்ந்தெடுக்கிறார்கள். இன்னும் சிலர் இவர்களைத் தேடி வருகிறார்கள் இப்படி உளவுத் துறைக்கு உதவ முன்வருகிற எல்லோருக்கும் வேண்டிய பணம் பரிசுகள் சிபாரிசு போன்றவற்றைத் தாராளமாகச் செய்து கொடுத்து ஊக்குவிக்கிறார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியில்...

கொண்ட துரை தம்பதியினரின் நிதியுதவியில் 108 ஜோடிகளுக்கு திருமணம் செய்து வைக்கப்படவுள்ளது.

தாலி, கூறைச் சேலை மற்றும் திருமணத்திற்கான இதர செலவுகளுக்கும் பணம் வழங்கப்பட்டு, 108 தம்பதிகளுக்கும் செல்வச்சந்நிதி ஆலயத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி திருமணம் நடத்தி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த 108 தம்பதியினரையும் யாழ்ப்பாணத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்கள் ஊடாகவே தெரிவு செய்தோம்.

அன்றைய திருமண நிகழ்வில் கலந்து கொண்டு 108 தம்பதியினரையும் வாழ்த்தி, அன்று மதியம் ஆலயத்தில் நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றார். (ம-7,33)


மஹஜன சம்பத
திகதி 2025.08.25
சீட்டிழுப்பு இலக்கம் 5932
Y 4 6 8 2 7 3
அத சம்பத
Y 8 2 7 3
சீட்டிழுப்பு இலக்கம் 0507
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.08.25
0048
மகரம் 06 26 50 51

தன நிதானய
திகதி -2025.08.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1962
T 13 46 64 68 T
Double Chance 26868

மெகா பவர்
திகதி 25/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2280
P 19 41 68 70 76

ஜய
திகதி 2025.08.25
சீட்டிழுப்பு இலக்கம் 0200
W 6 8 0 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4174
சீட்டிழுப்பு திகதி 25.08.2025
O 32 33 38 46
O
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.25
சீட்டிழுப்பு இலக்கம் 1241
துலாம் 06 18 31 52 துலாம்
தன யோக இலக்கம் 83044


## வட்டுக்கோட்டை...

கவனிப்பார் இன்றிக் காணப்பட்ட நிலையில் அதனை மீள் உருவாக்கம் செய்வதற்குரிய பணிகள் யாழ்ப்பாணம் மரபுரிமை அமையத்தினால் கடந்த பெப்ரவரி மாதம் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களின் தலைமையில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தினை அடைந்து இருக்கும் நிலையில் மிக விரைவில் கும்பாபிஷேகம் நடத்தி மக்களின் வழிபாட்டுத் தலமாக்கப்படவுள்ளது.

அமெரிக்காவில் வசிக்கின்ற கைதடியினைச் சேர்ந்த கலாநிதி சிவயோகநாதனின் மகளும் Meta நிறுவனத்தில் பணிபுரிந்து வருபவரான பாலயோகஸ்தினி சிவயோகநாதன் இவ்வாலயத்தை பழைய நிலைக்கு மீள் உருவாக்கம் செய்வதற்குரிய நிதியுதவியினை வழங்கியிருந்த நிலையில் குறித்த ஆலயம் மீள் எழுச்சி கண்டுள்ளது.

குறித்த ஆலயத்தில் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்தல், எண்ணைக் காப்புச் சாத்தல், கும்பாபிஷேகம் தொடர்பான விபரங்கள் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தினரால் விரைவில் அறிவிக்கப்படும். (ம-7,33)

## அகழ்வுத்தளங்...

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில், கடந்த 06ஆம் திகதி வரையில் 32 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டிருந்தன.

இந்நிலையில் 33ஆவது நாளான நேற்றுத் திங்கட்கிழமை மூன்றாம் பகுதி அகழ்வுப் பணிகள் ஆரம்பமானது.

நேற்று ஏற்கெனவே இருந்த அகழ்வு தளங்களை மேலும் விரிவாக்கம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இன்றைய தினமும் அதே பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை கடந்த 06ஆம் திகதி வரையில் கட்டம் கட்டமாக 41 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது, 150 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் அவை முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## மேன்முறையீட்டை...

றம் தீர்மானித்துள்ளது.

குறித்த மனுக்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக உயர் நீதிமன்றம் நேற்று (25) அறிவித்துள்ளது.

இந்த மேன்முறையீட்டு மனுக்கள் பிரீத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் சம்பத் அபேகோன் ஆகிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அடங்கிய அமர்வின் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டது.

இதன்போது பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, நீதிமன்றத்தின் முன் சாட்சியங்களை முன்வைத்ததுடன், வழக்கின் தமிழ்மொழி பெயர்ப்புகளைப் பெற நான்கரை ஆண்டுகள் வரை சென்றதாக சுட்டிக்காட்டினார்.

எனவே மேன்முறையீட்டு விசாரணைக்கு குறுகியகாலத் திகதி ஒன்றை வழங்குமாறு பிரதிவாதி சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கோரினார்.

அதற்கமைய பிரதிவாதிகளின் மேன்முறையீடு தொடர்பான மனுவை எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக நீதியரசர்கள் அறிவித்துள்ளனர்.(ம-7)

## பல்கலைக்கழக...

குழுவினால் இணையவழியில் வெளியிடப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் http://www.selection.ugc.ac.lk/ எனும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குச் சென்று தமது பாடநெறிக்கான வெட்டுப்புள்ளியை அறிந்து கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ராஜ...

வருவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

விசாரணைகளுக்கு வரம்பு இல்லை என்றும், சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## மண்...

தரவுள்ள ஜனாதிபதி, மண்டைதீவில் அமைக்கப்படவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்கான ஆரம்ப நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட செயலகத்தில் கடவுச்சீட்டு அலுவலகத்தை திறந்து வைத்து, கடவுச்சீட்டு வழங்கும் பணிகளை ஆரம்பித்து வைப்பார்.

தொடர்ந்து மயிலிட்டித் துறைமுகத்திற்கு விஜயம் செய்து, துறைமுக அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைப்பார். அத்துடன் யாழ்.பொதுநூலகத்திற்கு விஜயம் செய்து நூலகத்தைப் பார்வையிடவுள்ளதுடன் சில நூல்களையும் அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

மறுநாள் 02ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்து, வட்டுவாகல் பாலப் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைப்பார். அத்துடன் தென்னை முக்கோண வலய செயற்திட்டத்தையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ம-7,33)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.08.2025 வெற்றி வாரம் 0640
ஆங்கில எழுத்து E
0 6 0 6 5 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,777,308.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2906
சீட்டிழுப்பு திகதி 2025.08.25 தினம் திங்கட்கிழமை
17 32 45 54 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,641,528.80
DLB

சனிதா
திகதி 25.08.2025 வெற்றி வாரம் 5067
18 37 39 62 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,814,173.20
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.08.25 வெற்றி வாரம் 2155
18 29 39 62 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,236,963.20
DLB

சீட்டிழுப்பு வாரம் 4618
சீட்டிழுப்பு திகதி 25.08.2025 தினம் திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,091,633.60
02 41 53 57
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 21 03 23 53 69
2082
25.08.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.589,970,711.20
DLB

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2732
சீட்டிழுப்பு திகதி : 2025.08.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.85,711,518.40
19 24 29 45 U
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 27 - 10 - 1956 | 25 - 08 - 2025 |



## திருமதி கிருஸ்ணமூர்த்தி செல்வராணி

நாவற்காடு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணமூர்த்தி செல்வராணி அவர்கள் நேற்று 25.08.2025 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வீரகேசரி மூத்த பத்திரிகையாளர் அமரர் சி.செல்லத்துரை - இராஜேஸ்வரி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் கிருஸ்ணமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும் வே.துளசிகா, கி.ஜனகன் (பிரதேசசபை ஊழியர் - புத்தூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வேந்தன் (ஊழியர் புகையிரதநிலையம் - காங்கேசன்துறை), பிரியங்கா ஆகியோரின் அன்பு மாமியாரும் சுபாணன், ஹரிஸ்ணன், சுபகரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செல்வச்சந்திரன், மணிமேகலை, சுலோசனா, ரவிச்சந்திரன், ஞானச்சந்திரன், அமரர் ஜெயச்சந்திரன் மற்றும் உமாராணி, ஜமுனாராணி, யாழினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பவதி, பரஞ்சோதி, யோகராசா, ஸ்ரீமதி, பிரேமச்சந்திரன், செந்தில்பாலன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26.08.2025 செவ்வாய்க்கிழமை பி.ப 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்:*
(1490) குடும்பத்தினர்.


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (5126)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் மின்சாதனப் பொருட்கள் விற்பனைக் நிறுவனத்திற்குப் பின்வரும் வேலையாட்கள் தேவை.

- பில் போடுபவர் (வயது : 21 – 35 இற்குட்பட்ட பெண்கள் மட்டும்)
- விற்பனை உதவியாளர் (வயது : 21 – 35 இற்குட்பட்ட ஆண்கள் மட்டும்)

ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 875 9532 (C-3737)

**கனடா - வரி இல்லாமல்**
**விரைவு பொதிகள் சேவை**

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2660/- |
| 21-27 Kg | 2480/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3735)

UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நீர்வேலியில் 9.3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மாசுவன் சந்தியில் 750m தூரம் நன்னீர் ஊற்று செம்மண் நிலம் பிரித்துக் கொடுக்கப்படும். (C-3739)

077 137 0386
077 470 1472


# பொதுக்கூட்டம்

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையினுடைய பொதுக்கூட்டம் 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் பொதுச் சபை உறுப்பினர்கள் 10.09.2025ம் திகதிக்கு முன்னதாக எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். நிகழ்ச்சி நிரல் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

செயலாளர்
தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (C-3740)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சின்னத்தம்பி சரஸ்வதி (ராணி)

| மண்ணில் | திதி: (27.08.2025 புதன்கிழமை) ஆவணி பூர்வபட்ச சதுர்த்தி | விண்ணில் |
|---|---|---|
| 20.12.1951 | | 07.09.2024 |

பத்துத் திங்கள் எமைச் சுமந்து ஈன்றெடுத்து
பாலூட்டி தாலாட்டி சீராட்டி
பக்குவமாய் பல கதைகள் சொல்லி
எமை வளர்த்து ஆளாக்கி – வாழ்க்கையில்
எமை மேலோங்கி மிளிர வைத்த எம் தாயே!
ஓராண்டென்ன நூறாண்டு சென்றாலும்
உம் நினைவுகள் எம் மனதில் பசுமரத்தாணி போல்
பதிந்துள்ளதம்மா!
ஏழேழு ஜென்மத்திலும் நீதான் எம் தாயம்மா
உம் ஆத்மா இறைவன் திருவடி சேர்ந்து
பேரின்ப பெருவாழ்வடையட்டுமம்மா!

எம் அருமை அம்மம்மாவே!
பெருமை மிக்க அப்பம்மாவே!

எல்லோரினதும் மதிப்புக்குரிய பூட்டியம்மாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சித்தம்பாதி,
கரணவாய்,
கரவெட்டி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(C-3738)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.